



நிறை செல்வம் பெற்று நலமுடன் வாழ எமது வாழ்த்துக்கள் உரித்தாகுக.

✌

**சுபம்**

# வீட்டில் வண்ண மீன் வளர்ப்பு முறைமை

(ஆரம்ப நிலையில் உள்ளவர்களுக்கு)



**Rs. 80/=**

பதிப்பு 2

தொகுப்பு 1

வெளியீடு 10.02.2020

# படைப்பு உரிமை

## ஆசிரியர் - செங்கை ஆரியன்

பதிப்பு உரிமை (Copyright) : © 2019
**Business Systems & Publications**
(Reg.No; 15663 of 23rd May 1985)

Northern Angel Aquarium®
Share the wonder


(Reg.No; 15672 of 3rd June 1985)

17, இராச வீதி, அச்சுவேலி 40150, வடமாகணம், இலங்கை
(94) 021 223 2229
email: farm@royjoygroup.com
Web: www.royjoygroup.com



## முறை 3 மைக்ரோ புளு உற்பத்தி

உருளைக்கிழங்கை சரி பாதியாக வெட்டி ஈரப்பதமான ஓர் இடத்தில் நேரடி சூரிய ஒளி படாதவாறு 4 நாட்கள் புதைத்து வைக்கவும். ஓட்ஸ் சிறிதளவை இளம் சூட்டு நீரில் பிசைந்து அத்துடன் சிறிதளவு ஈஸ்ட் சேர்த்து பின்னர் புதைத்து வைத்த உருளைக்கிழங்கின் அழுகிய உட் பகுதிதை சுரண்டி எடுத்து பிசைந்து வைத்துள்ள ஓட்ஸ்சுடன் நன்றாகக் கலந்து 4 நாட்கள் வைக்கவும். 5 ஆம் நாள் இதில் கொதிப்பது போல் தெரியும். இவை அனைத்தும் மைக்ரோ புளுக்களே. இவற்றை முட்டையில் பொரித்த மீன் குஞ்சுகளுக்கு உணவாகக் கொடுக்க முடியும்.




மேலதிக நோய்களும் அதற்கான நோய்த் தடுப்புக்கள் பற்றியும் மீன்களின் இனப்பெருக்கங்கள் பற்றியும் விபரமாக எமது இரண்டாம் தொகுப்பில் பார்ப்போம்.

எந்த வகை மீன்களை ஒன்று சேர்த்து வளர்க்க முடியும் என்பதனை பின் அட்டையிலுள்ள வரைபடத்தில் பார்த்து தெரிந்து கொள்ளவும். ஆயினும் சிலவேளைகளில் இந்த நியதிக்கு மாறகவும் நடக்கவும் வாய்புண்டு. எதனையும் நமது சொந்த முயற்சியிலும் அனுபவத்திலுமே அறிந்து கொள்ள முடியும்.

## முகவுரை

வீடுகளில் செல்லப் பிராணிகள் வளர்ப்பில் அதிகம் ஆர்வம் கொண்டுள்ளவர்கள் நாய், பூனை, பறவை வளர்ப்பதைப்போன்று பலவித வண்ண மீன்களை வளர்ப்பதிலும் ஆர்வம் கொண்டுள்ளனர். வீடுகளில் மீன் தொட்டியை வடக்கு அல்லது கிழக்கு திசையில் வைக்க வேண்டும். மீன் தொட்டிகளை படுக்கை மற்றும் சமையல் அறைகளில் வைத்தலாகாது. அதிக சூடு அல்லது குளிர் உள்ள இடத்தில் மீன் தொட்டி அமைப்பதை தவிர்த்தவும். நேரடியாக சூரியா ஒளி படும் இடத்தையும் தவிர்த்துக் கொள்ளவும். உங்களது மீன் தொட்டியில் இரட்டை தானத்தில் மீனகள் இருத்தல் கூடாது. எப்போதும் ஒற்றைத் தானத்தில் தான் இருக்க வேண்டும். மீன்களை தெரிவு செய்யும் போது ஒரே நிறத்தில் எட்டு மீன்களையும் கறுப்பு நிறத்தில் ஒரு மீனையும் தெரிவு செய்வதே நன்று. அவ்வப்போது நோய் வாய்ப்பட்டு இறக்கும் மீனுக்கு பதிலாக இன்னுமொரு மீனை தொட்டியில் விட வேண்டும். பெரிய பங்களாக்களிலும் நிறுவனங்களின் முகப்பிலும் மிகப்பெரிய மீன்தொட்டிகள் வைத்து விலை உயந்த பலவகை மீன்கள் வளர்க்கப்படுகின்றன. பொதுவாக மீன்கள் அழகுக்காக மட்டுமின்றி அமைதிக்காகவும் வளர்க்கப்படுகின்றன.பொழுதுபோக்கிற்கு மீன்கள் வளர்ப்பதால் உடலும் உள்ளமும் நிம்மதி பெற்று உயர் இரத்த அழுத்தமும் குறையும் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். சீன ∴பெங்சுயி முறைப்படி குடும்ப மகிழ்சியும் பண வருவாயும் அதிகரிக்கும் என நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

## மீன் இன வகைகள்

மீன்களைப் பொறுத்தவரையில் கீழ்க்குறிப்பிட்டுள்ள மீன்களையே அதிக அளவில் பெரும்பாலனோர் விரும்பி விட்டில் தொட்டிகளில் வளர்க்கின்றனர்.

1. கப்பிஸ்
2. மொலி
3. பிளேட்டி
4. சொட்டேல்
5. சீபிற

6. காப்ஸ் மறு பெயர் கொய்
7. கோல்ட் பிஷ்
8. பைட்டர்ஸ்

வசதியுள்ளவர்கள் விரும்பும் மீன்களாக ஏஞ்சல், ரெட் கோமேட், சூபங்கின், ஒரண்டா கோல்ட் பிஷ், லயன் கெட் கோல்ட் பிஷ், பிளக் மோர், ரேயின்போ, ரேட்ற்ற, கற்ட் பிஷ், ஒஸ்கார், குறமீ மற்றும் சீன வாஸ்து அரவாணா போன்ற விலை உயர்ந்த வகைகளும் உள்ளன. சிங்கப்பூரில் இவ்வகை அரவாணா மீனை பக்தியுடன் வளப்பார்கள். பலா் அரவாணா லட்சுமி கடாச்சம் பொருந்தியதாகக் கருதுகின்றனா். இதுவே உலகில் மிக விலை உயா்ந்த மீனாகக் கருதப்படுகிறது.

ஒஸ்கார் குறமீ போன்ற மீன்கள் மிக வேகமாகவும் பெரியதாகவும் வளரக் கூடியவை. இவ்வகை மீன்கள் வளப்போா் கைகளிலிருந்து உணவினை எடுத்து சாப்பிடும் திறன் உடையவை. இவற்றை எமக்கேற்றவாறு பயிற்றிவிக்க முடியும்.




கப்பிஸ் பிளேட்டி சொட்டேல் சீபிற கோல்ட் பிஷ் மொலி போன்ற மீன்கள் மீன் தொட்டியின் மேல் மட்டத்திலேயே பெரும்பாலும் வாழும். ஏஞ்சல் ரேயின்போ ரேட்ற்ற ஒஸ்கார குறமீ போன்ற மீன்கள் மீன் தொட்டியின் நடுப்பகுதிலேயே பெரும்பாலும் வாழும். காப்ஸ் கற்ட் பிஷ் போன்ற மீன்கள் மீன் தொட்டியின் அடி மட்டத்திலேயே பெரும்பாலும் வாழும்.

## முட்டையில் பொரித்த மீன் குஞ்சுகள் மற்றும் மீன் குஞ்சுகளுக்கான உணவு தயாரித்தல்

### முறை 1 இன்போசுயா உற்பத்தி

ஓர் சிறிய அளவு கோவாவை கொதித்த நீரில் 3 நிமிடம் அவித்துக் கொள்ளவும். அவிந்த கோவவை உங்கள் மீன் தொட்டியிலுள்ள பழைய நீரிருடன் சேர்த்து ஒரு கண்ணடிக்குவளையில் 12 நாட்களுக்கு நேரடி சூரிய ஒளி படாதவாறு வெளிச்சம் படும் ஓர் இடத்தில் வைக்கவும். தினமும் காலையில் பிளாஸ்க் கறண்டியினால் கலக்கி விடவும். 12 நாளின் பின் கோவா இலைகளை அகற்றி விட்டு முதல் நாள் தொடங்கும் போது இருந்த அளவிற்கு மீண்டும் உங்கள் மீன் தொட்டியிலுள்ள பழைய நீரினைச் சேர்க்கவும். 20 நாட்களின் பின்னர் இந்த நீரில் கண்ணுக்குத் தெரியாத மிகச் சிறிய நுண் உயிர்கள் இருக்கும். இந்த நீரை தினமும் 3 அல்லது 4 மேசை கறண்டிகள் முட்டையில் பொரித்த மீன் குஞ்சுகளுக்கு 20 நாட்கள் வரை உணவாகக் கொடுக்க முடியும். 21 நாள் முதல் பெரிய மீன்களுக்கு கொடுக்கும் உணவை அரைத்து மாவாக்கி கொடுக்கலாம்.

### முறை 2 இன்போசுயா உற்பத்தி


இரண்டு வாழைப்பழங்களின் தோலை உங்கள் மீன் தொட்டியிலுள்ள பழைய நீரிருடன் சேர்த்து ஒரு கண்ணடிக்குவளையில் 12 முதல் 14 நாட்களுக்கு நேரடி சூரிய ஒளி படாதவாறு வெளிச்சம் படும் ஓர் இடத்தில் வைக்கவும். தினமும் காலையில் பிளாஸ்க் கறண்டியினால் கலக்கி விடவும். 12 நாளின் பின் வாழைப்பழங்களின் தோலை அகற்றி விட்டு முதல் நாள் தொடங்கும் போது இருந்த அளவிற்கு மீண்டும் உங்கள் மீன் தொட்டியிலுள்ள பழைய நீரினைச் சேர்க்கவும். இந்த நீரில் கண்ணுக்குத் தெரியாத மிகச் சிறிய நுண் உயிர்கள் இருக்கும். இந்த நுண் உயிர்கள் உயிர் வாழ இதற்கு தினமும் பக்ரிய உணவளிக்க வேண்டும். ஒரு தேக்கறண்டி அளவு சுத்தமான பாலை இதற்கு கொடுக்கலாம். இந்த நீரை தினமும் 3 அல்லது 4 மேசை கறண்டிகள் முட்டையில் பொரித்த மீன் குஞ்சுகளுக்கு 20 நாட்கள் வரை உணவாகக் கொடுக்க முடியும். 21 நாள் முதல் பெரிய மீன்களுக்கு கொடுக்கும் உணவை அரைத்து மாவாக்கி கொடுக்கலாம்.









## நோய்த் தடுப்பு

சிலவேளைகளில் மீன்களின் செட்டைகள் கிழிந்து அல்லது உடலில் புண்கள் ஏற்பட்டு இருப்பதை அவதானித்தால் அந்த காயப்பட்ட மீனை தனியான தொட்டி ஒன்றுக்கு மாற்றி Antibiotic Tera எனும் எமது மருந்தைப் பாவிக்கலாம். பாவனைக்கு முன் சகல விபரங்களையும் அறிந்து கொண்ட பின்னரே மருந்துகளைப் பாவிப்பது சிறந்தது.

## மீன்களின் ஆயுட் காலமும் அதன் வளர்ச்சியும


| மீனினவகை | ஆயுட் காலம் | ஆகக் கூடிய வளர்ச்சி |
|---|---|---|
|  கப்பிஸ் | 2 வருடங்கள் | 4 சென்ரி மீட்டர் |
|  மொலி | 5 வருடங்கள் | 6 சென்ரி மீட்டர் |
|  பிளேட்டி | 3 வருடங்கள் | 3 சென்ரி மீட்டர் |
|  சொட்டேல் | 2 வருடங்கள் | 6 சென்ரி மீட்டர் |
|  சீபிற | 3.5 வருடங்கள் | 4 சென்ரி மீட்டர் |
|  காப்ஸ் | 25 வருடங்கள் | 20 அங்குலம் |

| மீனினவகை | ஆயுட் காலம் | ஆகக் கூடிய வளர்ச்சி |
|---|---|---|
|  கோல்ட் பிஷ் | 10 வருடங்கள் | 6 அங்குலம் |
|  பைட்டர்ஸ் | 3 வருடங்கள் | 2.25 அங்குலம் |
|  ஏஞ்சல் | 10 வருடங்கள் | 4 அங்குலம் |
|  ரெட் கோமேட் | 14 வருடங்கள் | 6 அங்குலம் |
|  சூபங்கின் | 3 வருடங்கள் | 6 அங்குலம் |
|  ரேயின்போ | 8 வருடங்கள் | 3 அங்குலம் |

போது கண்ணாடி உடையக் கூடும். நீரை நிரப்பும் முன் தொட்டியின் நிலை சரியாக உள்ளதா என்பதனை உறுதி செய்து கொள்ளவும். சரியான நிலையில் தொட்டியை வைக்கவிட்டால் நீரின் கணம் அதிகரிக்கும் போது சரிவான பகுதி உடைய வாய்புண்டு. நீருடன் மீன் தொட்டிகளை ஒருபோது தூக்கக் கூடாது. கண்ணடி உடைந்து உங்களை காயப்படுத்திவிடும்.

கீழே உள்ள வரை படத்தில் காட்டியவாறு உங்கள் தொட்டியினை அமைக்கலாம். தேவை ஏற்படின் இந்த வரை படத்துக்கேற்ப உங்களது கருத்தையும் கனவையும் மையப்படுத்தி தொட்டியை அமைக்கவும் முடியும்.

கடல் சிப்பிகளளில் கல்சியம் இருப்பதினால் நீரல் PH அளவின் மாற்றம் ஏற்பட இடம் உண்டு. ஆகவே சிப்பிகள் பாவிப்பதை தவிர்க்கவும். கடல் சிப்பிகளளில் இருந்து கல்சியம் வெளியேற குறைந்தது 2 வருட காலமாகும். அதன் பின்னரே கடல் சிப்பிகளை மீன் தொட்டிகளில் பாவிக்க முடியும்.




இந்த methylene blue பவுடர் நீரைச் சுத்தமாக வைத்திருக்க உதவும். இதனைப் பாவிக்கும் முன் பயன்பாட்டுக்கு முன் உள்ள எச்சரிக்கையை கவனமாகப் படிக்கவும்.


அதே போலவே தினசரி 12 மணி நேரம் வெளிச்சம் இருப்பதும் அவசியமாகும். வெளிச்சம் சரியாக கிடைக்காத பட்சத்தில் செயற்கையான வெளிச்சம் ஏற்படுத்துவதும் மிக அவசியமானதாகும். சகல ஜிவராசிகளும் சூரியனை மையப்படுத்தியே இருப்பதினல் இரவில் வெளிச்சம் இல்லாது இருப்பதே சிறந்தது. இரவில் மீன் தொட்டியை காற்று புகக்கூடிய துனியினால் மூடலாம்.

நல்ல புரதச் சத்துள்ள உணவு வகைகளை மீன்களுக்கு அளிப்பதே மிகச் சிறந்தது. சந்தைகளிலும் கடைகளிலும் உள்ள தரம் குறைந்த உணவுகளை தவிர்த்து நல்ல உயர் தரமான மீன் உணவை கொடுக்கவும். மீன்களுக்கு உணவு அளவிற்கு அதிகமாக கொடுக்கவும் கூடாது. அளவிற்கு அதிகமான உணவினாலும் மீன்கள் இறக்க வாய்ப்பு உண்டு. ஒருவரே தினமும் மீன்களுக்கு உணவளிப்பது நன்று அல்லது ஒரே முறைமையில் உணவளிப்பது சிறந்தது. நுளம்பின் குடம்பிகள் குட்டையிலுள்ள இரத்தப் புழுக்கள் மிகச் சிறந்த உணவாகும். ஆனாலும் அவற்றை உங்கள் ஆரோக்கியமான மீன்களுக்கு கொடுக்க முன் அவை சுகாதாரமானவையா என உறுதிப்படுத்திய பின்னரே கொடுக்க வேண்டும். தரக்குறைவானதும் சுகாதாரக்கேடுள்ளவற்றை கொடுப்பதினால் மீன்கள் இறக்க நேரிடிலாம்.

**<u>மீன் தொட்டி அமைக்கும் முறை</u>**

மீன் தொட்டிகள் காற்றுப் பம்புகள் நீர் வடிகட்டிகள் அழகு படுத்தும் கற்கள் மற்றும் மரங்கள் செடிகள் போன்றவை ஒரு மீன் தொட்டியை அமைக்க மிக முக்கியமானது. இவற்றை வளர்ப்பு மீன் விற்பனையாளர்களிடம் இருந்து வாங்க முடியும். கண்ணாடியிலான தொட்டிகளாயின் தொட்டியின் அடிப்பாகத்திற்க்கு கட்டாயமாக றேயி∴போம் வைக்க வேண்டும். இல்லையேல் நீரை தொட்டியில் நிரப்பும்

| **மீனினவகை** | **ஆயுட் காலம்** | **ஆகக் கூடிய வளர்ச்சி** |
|---|---|---|
|  ரேட்ற்ற | 5 வருடங்கள் | 5 சென்ரி மீட்டர் |
|  கற்ட் பிஷ் | 60 வருடங்கள் | 2 அடி |
|  ஒஸ்கார் | 20 வருடங்கள் | 12 அங்குலம் |
|  குறமீ | 5 வருடங்கள் | 2.5 அடி |
|  அரவாணா | 15 வருடங்கள் | 3 அடி |




**<u>மீன் வளப்பில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியவை</u>**

மீன்கள் சிறப்பாகவும் நன்றாகவும் வளர சரியான தட்ப வெப்ப நிலை சுத்தமான நீர் உணவு போதிய ஆக்ஸிஜன் போன்றவை அத்தியவசியமானதாகும். நீரில் குளோரின் கலந்திருந்தால் அவை சுவாசிக்க சிரமப்படும். எனவே நீரை நீங்கள் சுவைத்து அதன் தன்மையை உணர்ந்த பின்பே தொட்டிகளுக்கு நீரை மாற்ற வேண்டும். மேலும் நைட்ரைட் மற்றும் அம்மோனியா நீரில் இருப்பின் அந்த நீர் மீன் வளர்ப்பிக்கு உகந்தல்லா. நீரின் தட்ப வெப்ப நிலை 68 முதல் 78 பாரன்னைட் ஆக இருக்க வேண்டும். சாரதணமாக நீரில் PH அளவு 6 முதல் 8.5 வரை அல்லது TDS அளவு 600 மேல் இல்லது இருத்தல் நல்லது. PH சராசரி 7.5தும் TDS சராசரி 300 முதல் 600 வரை இருப்பதே சிறந்தது. அப்போதுதான் மீன்கள் அதில் வசிக்க முடியும். அடிக்கடி நீரை மாற்றுவதால் நீரிலுள்ள வெப்ப நிலை திடீர் மாற்றம் ஏற்பட்டு மீன்கள் இறக்க நேரிடும். தொட்டியில் ஒரு அங்குல நீளமான ஒரு மீனுக்கு 4 லீட்டர் நீர் அவசியமானது. ஆகவே தொட்டியில் உள்ள நீரின் அளவுக்கு ஏற்பவே மீன்களை தொட்டியில் விட வேண்டும். அளவுக்கு அதிகமான மீன்கள் தொட்டியில் இருப்பதை தவிர்த்துக் கொள்ளவும். பொதிய அளவு இடவசதியின்மையாலும் மீன்கள் இறக்க வாய்ப்புண்டு.




மீன்கள் வாழ்ந்த தொட்டியில் உள்ள நீரில் ஒரு சில நல்ல மைக்ரோ பக்ரியாக்கள் இருக்கும். இந்த பக்ரியாக்களை மீன் உணவாய் உட்கொள்ளும். அவற்றை முற்று முழுதாய் அளிப்பதும் நல்லதில்லை. மாதத்தில் இரு தடைவ நீர் மாற்ற வேண்டும். அதின் போது தொட்டியிலிருந்து 25 வீத நீரை தொட்டியின் அடிப்பாகத்திலிருந்து அப்புறப்படுத்தி விட்டு மீண்டும் புதிய நீரை சேர்க்க வேண்டும். நீரை தொட்டியின் அடிப்பாகத்திலிருந்து அப்புறப்படுத்தும் போது மீன்களின் எச்சங்கள் (அமோனிய மற்றும் நைதரசன் போன்றவை) கூடுதல் கவனமெடுத்து அவற்றையே முதலில் அகற்ற வேண்டும். மீன்தொட்டியை இரண்டு மாதத்திற்கு ஒரு தடவை முழுதாய் சுத்தம் செய்யலாம். அதின் போது தொட்டியிலிருந்த நீரில் 50 வீத நீரை தொட்டியை சுத்தம் பின் மீண்டும் தொட்டியில் புதிய நீருடன் சேர்த்துக்கொள்ளவும். எப்போதும் நீரை மாற்றும் போது எம்மிடமுள்ள methylene blue பவுடர் பாவிப்பதின் மூலம் நீரிலுள்ள தேவையற்ற பக்ரியாக்களை அளித்து விட முடியும்.